IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W. 1)**

Solemnly affirmed and sworn by Tmt.D.Gnanadeepam Grade III Bench clerk on 23.08.2024. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 3/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமகிருஷ்ணன் | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

எனது திருமண பத்திரிக்கையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**திருமண பத்திரிக்கை வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது ஆதார் அடையாள அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சாட்சி ராமகிருஷ்ணன் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது காப்பீட்டு அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சாட்சி ராமகிருஷ்ணன் என்பவரது காப்பீடு அட்டையின் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது அண்ணன் மகன் ராஜாராம் பாண்டியன் பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான மனு ஏற்பு ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**09.12.2006ம் தேதியிட்ட மனு ஏற்பு ரசீதின் அசல் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது பணியாளர் அடையாள அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பணியாளர் அடையாள அட்டையின் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**23.11.2018ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புகளை அனுப்பியதற்கான அஞ்சல ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சலக ரசீதுகள் (5 எண்ணம்) வா.சா.ஆ. 7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புகளை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (4எண்ணம்) வா.சா.ஆ. 8 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு 5ம் பிரதிவாதிக்கு சார்பு செய்யப்படாமல் திரும்ப வந்ததற்கான அஞ்சல உறையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சலக உறை வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1ம் பிரதிவாதி எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**28.12.2018ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).